# செய்னுல் ஆபிதீன்

# இமாம்

# ஸஜ்ஜாத்;

# அலைஹிஸ் ஸலாம்

“மதீனா நகரில் வாழ்ந்த ஏழை எளியவர்களுக்கு இரவுகளில் உணவுப் பொருட்களை வழங்கி வந்தார் ஒரு மர்ம மனிதர். இமாம் ஸஜ்ஜாத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மறைந்த போது தான் அம் மர்ம மாமனிதர் இவர் தான் என்பதைப் புரிந்து கொண்டார்கள்..||

ஜனனம்

அவரது இயற் பெயர் அலீ. பிரபல்யமான பெயர்கள் ஸஜ்ஜாத்> ஸெய்னுல் ஆபிதீன் என்பன. ஹிஜ்ரி 38 (1) ஜமாதுல் அவ்வல் 15ம் நாள் இமாம் ஹுஸைனுக்கும் அன்னை ஷஹ்ர்பானுவுக்கும் செல்லக் குழந்தையாக மதீனா நகரில் பிறந்தார்கள். (2)

நற்பண்புகள்

இமாம் ஸஜ்ஜாதின் உறவினர்களுள் ஒருவர் ஒரு முறை ஏனையோர் மத்தியில் வைத்து மிக மோசமான வார்த்தைகளால் அன்னாரை ஏசிவிட்டுப் போய்விட்டார். இமாம் தனது சகாக்களைப் பார்த்து> “கேட்;டீர்;களா அவர் சொன்னவற்றை. இனி இதற்கு என்ன பதில் சொல்கிறேன் என்பதைப் பார்க்க வேண்டுமாயின் என்னோடு வாருங்கள்||என்றார்.

“நாம் தங்ளோடு வருகிறோம்> ஆனால் அவன் கெட்ட வார்த்தைகளால் வசை பாடிய போதே நாம் பதிலளித்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே|| எனக் கூறிய சகாக்கள் இமாமைப் பின்தொடர்ந்து சென்றனர்.

நடு வழியில் பின்வரும் குர்ஆன் வாக்கியத்தை ஓதி விளக்கினார். அது சிறந்த விசுவாசிகளின் உயர் பண்புகளை விளக்குகிறது. “அவர்கள் கோபத்தை அடக்கிக் கொள்வார்கள்> மக்களை மன்னித்து விடுவார்கள். அல்லாஹ் நல்லது செய்பவர்களை நேசிக்கிறான்.|| (3)

இமாம் பழிவாங்கச் செல்கின்றாரோ என நினைத்த சில சகாக்களும் இந்த வசனத்தை இமாம் ஓதிய போது இமாமின் நோக்கம் வேறானது என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

அந்த மனிதனின் வீட்டை அடைந்ததும்> இமாம் அம் மனிதரை அழைத்தார். ‘அலீ இப்னுல் ஹுஸைன் வந்திருப்பதாகச் சொல்லுங்கள்| என்றார். இமாம் தன்னிடம் பழிவாங்கவே வந்திருப்பதாகக் கருதிய அம் மனிதரும் சண்டைக்குத் தயாராக வெளியே வந்தார்.

இமாம் அவரை அணுகி> “என் சோதரா> கொஞ்சம் முன்னாடி என்னிடத்தில் வந்திருந்தீர். ஏதேதோ தாறுமாறாகக் கதைத்தீர். நீர் சொன்ன மோசமான பண்புகள்

என்னிடம் இருப்பின் இறைவன் என்னை மன்னிக்கட்டும். அப்படி என்னிடம் இ;ல்லாவிட்டால் அல்லாஹ் உம்மை மன்னிக்கட்டும்‖ என்றார் மிக மென்மையாக.

இமாமின் இந்த வார்த்தைகளைக் கேட்டு வெட்கித் தலை குனிந்தார் அம் மனிதர். இமாமின் அருகே வந்து அவரது நெற்றியில் முத்தமிட்டவர் மிக்க வருத்தத்தோடு சென்னாhர்: “நான் சொன்னவை எதுவும் தங்களிடம் இல்லை. நான் அபாண்டமே சொன்னேன்.‖ (4)

இமாம் ஜஃபர் ஸாதிக் அலைஹிஸ் ஸலாம் அறிவித்த ஒரு சம்பவம் இது. மதீனாவில் ஒரு விகடன் வாழ்ந்து வந்தான். அவனது பெயர் தில்கக். தனது வேடிக்கைகளால் மக்களைச் சிரிக்க வைப்பது அவன் வழமை. எனினும் அலீ இப்னுல் ஹுஸைனை மட்டும் இதுவரை சிரிக்க வைக்க முடியவில்லை என அடிக்கடி கூறிவந்தான்.

ஒரு முறை இமாம் அவர்களைக் கடந்து செல்ல நேரிட்ட போது அன்னாரது தோளில் இருந்த அவரது போர்வையை எடுத்துச் சென்றுவிட்டான். இமாம் இதனைக் கவனிக்கவில்லை. இமாமின் சிஷ்யர்கள் ஓடிச் சென்று போர்வையைக் கொண்டு வந்தனர். “அவன் யார்?‖ இமாம் விசாரித்தார். “அவன் ஒரு கோமாளி;> பெயர் தில்கக்‖ சகாக்கள் கூறினர். இமாம் சொன்னார்: “அவனிடன் கூறுங்கள். வேடிக்கையாளர்கள் கைசேதப்படும் ஒரு நாள் நிச்சயமாக இறைவனிடம் உண்டு‖. (5)

ஸைத் இப்னு உஸாமா நோயுற்று மரணப் படுக்கையில் இருந்தார். செய்தி கேட்ட இமாம் நலம் விசாரிக்க விரைந்தார். இமாமைக் கண்டதும் ஸைத் தேம்பித் தேம்பி அழலானார். இமாம் விசாரித்தார்: “ஏன் கவலைப்படுகிறீர்?‖ ஸைத் சொன்னார்;: “பதினையாயிரம் தீனார் கடன் இருக்கிறது. அதைச் செலுத்துகின்ற அளவுக்கு என்னிடம் போதிய செல்வம் கிடையாது.‖ இமாம் அவரைத் தேற்றினார். “கவலைப்பட வேண்டாம். உன் கடன்களை நான் பொறுப்பேற்கிறேன்.‖ இமாம் வாக்களித்த பிரகாரமே அவை அனைத்தையும் தாமாகச் செலுத்தினார். (6)

மதீனாவில் வாழ்ந்த எளியவர்களிடம் அடையாளம் தெரியாத விதத்தில் நள்ளிரவில் சென்று உணவுப் பொருட்களை விநியோகிப்பது இமாமின் வழக்கம். பண உதவிகளும் செய்து வந்தார். அவரது மறைவுக்கு பின்னர் தான் நள்ளிரவில் உதவிய நல்லவர் இமாம் ஸஜ்ஜாத் என்பதை அவ் ஏழைகள் புரிந்துகொண்டனர். மதீனாவில் இருந்த நூற்றுக் கணக்கான ஏழைக் குடும்பங்களை அன்னாரே பராமரித்து வந்தார் என்பது அன்னாரின் வபாத்தின் பின்னரே தெரிய வந்தது. தம்மைப் பராமரித்தது இமாம் அலீ இப்னுல் ஹுஸைன் தான் என்பதை அவர்கள் தெரிந்திருக்கவேயில்லை.(7)

இமாம் ஸஜ்ஜாதின் சகோதரியின் புதல்வர் ஒருவர் சொல்கின்றார்: மாமனாராகிய இமாம் ஸஜ்ஜாதிடம் நெருங்கியிருந்து பழக வேண்டுமெனவும் அவருடன் இறுக்கமான உறவைப் பேணுமாறும் எங்கள் தாயார் அடிக்கடி எமக்குக் கூறுவார். அவரிடம் நான் சென்ற போதெல்லாம் அவரிடமிருந்து எதையாவது கற்றுக் கொண்டேன்.

சிலவேளைகளில்> தொழுகையிலே அவர் காட்டுகின்ற பணிவும் உள்ளச்சமும் எனதுள்ளத்தில் பணிவடக்கத்தை உருவாக்கின. அவரது அறிவில் அள்ளி அருந்திய சந்தர்ப்பங்கள் ஏராளம். (8)

இமாம் பாக்கிர் அலைஹிஸ்ஸலாம் விவரிக்கிறார்கள்: "எமது தகப்பனார் தொழுகையின் போது ஒரு பலவீனமான அடிமை தனது எஜமானுக்கு முன்னால் மண்டியிட்டிருக்கும் தோரணையில் கூனிக் குருகி நின்றிருப்பார். இறையச்சத்தால் அவரது உடல் நடுங்கும். அவரது முகத்தின் நிறம் மாறி விடும். ஒவ்வொரு தொழுகையிலும் அதைத் தனது இறுதித் தொழுகையாகக் கருதித் தொழுது வந்தார்.‖ (9)

சிறப்புகள்

உமையா வம்ச ஆட்சியாளர் அப்துல் மலிக்கின் புதல்வர் ஹிசாம் ஒரு முறை ஹஜ் செய்ய வந்திருந்தார். தவாபின் போது ஹஜருல் அஸ்வத் கல்லைத் தொட்டு முத்தமிட முனைந்தார். எனினும் ஏகப்பட்ட மக்கள் கூட்டம் அங்கு முண்டியடித்ததால் ஹிசாமால் ஹஜருல் அஸ்வத் பக்கம் செல்லக் கூட முடியவில்லை. முட்டி மோதும் சனக் கூட்டம் ஓரளவு குறையட்டுமே என ஓர் ஓரமாக நின்று எதிர்பார்த்திருந்தார்.

அவ்வேளை இமாம் செய்னுல் ஆபிதீன் ஹரம் ஷரீபுக்குள் பிரவேசித்து தவாபில் ஈடுபட்டார். ஹஜருல் அஸ்வதை நோக்கி அவர் வருகை தந்த போது மக்கள் கூட்டம் விலகி அவருக்கு வழிவிட்டது. அவர் எந்த நெருக்கடியும் இன்றி அமைதியாகச் சென்று ஹஜருல் அஸ்வதை முத்தமிட்டார். மக்கள் இமாமுக்கு வழங்கிய அபரிமிதமான மரியாதையைக் கண்ட ஹிசாமுக்கு கோபம் கோபமாக வந்தது பக்கத்தில் இருந்த ஒரு ஷாம் வாசி ஹிசாமிடம் இமாமைக் காட்டி> "மனிதர்கள் இப்படி மரியாதை செய்கிறார்களே. அந்த மனிதர் யார்?‖ என வினவினார். ஹிசாமோ"எனக்கு அவரைத் தெரியாது‖ என கடுமையாகப் பதிலளித்தார்.

பக்கத்தில் இருந்து இதனைச் செவிமடுத்துக் கொண்டிருந்தார் புகழ்பெற்ற கவிஞர் பரஸ்தக். "எனக்கு அவரைத் தெரியும்‖என ஹிசாமிடம் கூறிய வாறே இமாம் ஸஜ்ஜாதின் மகிமையை வர்ணித்து நீண்டதொரு கவிதையையே பாடி முடித்தார். பரஸ்தக்கின் இந்தச் செயலால் ஹிசாமுக்கு விஷமேறியது. பரஸ்தக்கை உடனே சிறையிடுமாறு கட்டளையிட்டார்.

பரஸ்தக் சிறைப்பிடிக்கப்பட்ட செய்தி கேட்ட இமாம் அவருக்கு பொற்கிழியொன்றை (10) அனுப்பி வைத்தார். அதனை ஏற்றுக் கொள்ள மறுத்த கவிஞர்> "நான் அல்லாஹ்வுக்காவும் அவனது றஸூலுக்காகவுமே இக்காரியத்தைச் செய்தேன்‖ எனச் செய்தியனுப்பினார். கவிஞரின் உளத் தூய்மையை மெச்சிய இமாம் பணப் பொதியை மீண்டும் அவருக்கு அனுப்பி வைத்தார். அதனைப் பெற்றுக் கொள்ளுமாறும் அல்லாஹ்விடம் அவருக்குக் கிடைக்கும் கூலியை அது பாதிக்காது என்றும் கொடுத்தவற்றைத் திருப்பிப் பெறுவது தமக்கு முறையல்ல எனவும் கூறியனுப்பினார். பரஸ்தக் அதனை ஏற்றுக் கொண்டதோடு அதனை கௌரவமாகவும் கருதினார். (11)

எழுச்சிக்கு வித்திட்ட இமாம்

இமாம் ஹுஸைன் அலைஹிஸ்ஸலாம் அவர்களது குடும்பத்தினர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு பல்வேறு இடங்களுக்கு காட்சிக்காகக் கொண்டு செல்லப் பட்டமையானது அன்னார் தோற்றுவித்த எழுச்சியின் தாக்கத்தை முஸ்லிம் சமுதாயத்தில் பதிய வைப்பதில் பெரும் செல்வாக்குச் செலுத்தியது எனலாம்.

அவர்கள் கொண்டு செல்லப்பட்ட இடங்களிலெல்லாம் கர்பலாவின் அகோரங்களை மக்களுக்கு விபரித்தனர். மக்களும் இவர்களை நேரடியாகவே கண்டனர். இது இமாம் ஹுஸைனின் வீரத் தியாகம் பற்றிய செய்தியை ஊரறியச் செய்ய உதவியது. தவிரவும் உமையா வம்சத்தினரின் குறிப்பாக யஸீதின் அட்டகாசங்களும் அம்பலமாகியது.

ஏனைய கைதிகளைப் போன்றில்லாமல் இமாம் ஹுஸைனின் குடும்பத்தினர் தாம் கொண்டு செல்லப்பட்ட இடங்களில்> மக்கள் நினைப்பது போன்று தாம் தோல்வியடைந்தவர்கள் அல்லர் மாறாக தாமே வெற்றி பெற்றவர்கள். அநியாயக்காரர்களான யஸீதும் அவனது ஆட்களுமே தோல்வியடைந்தவர்கள் என விளக்கி வந்தனர்.

கைதிகளாக்கப் பட்டோரில் குறிப்பாக இமாம் ஸைனுல் ஆபிதீன் அலைஹிஸ் ஸலாம் மற்றும் ஹஸ்ரத் ஸைனப் ஸலாமுல்லாஹி அலைஹா ஆகிய இருவரும் மக்களை உலுக்கி விடுவதில் பெரும் பங்காற்றினர்.

தன் தந்தையும் சகாக்களும் படுகொலை செய்யப்பட்ட போது கடும் நோய்வாய்ப்பட்டிருந்த இமாம் ஸஜ்ஜாத் பூரணமாகக் குணமடைந்திருக் கவுமில்லை. கர்பலாவின் கோரத்தாலும் கைதிகளாகக் கட்டியிழுத்துச் செல்லப்பட்டதாலும் ஏற்பட்ட துயரங்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்டும் இருந்தார்கள். இருப்பினும் இவை தம் கடமையைச் செவ்வனே செய்யத் தடையாக அமையவில்லை> அனைத்து சந்தர்ப்பங்களையும் மக்களைக் கண்விழிக்கச் செய்யப் பயன்படுத்தினார்கள்.

கூபாவில் ஹஸ்ரத் ஸைனப் மற்றும் பாத்திமா ஸு ஃக்ரா ஆகியோரின் அனல் கக்கும் உரைகளைக் கேட்டு மக்கள் கலங்கிப் போயிருந்தனர். வெட்கித் தலைகுனிந்தவர்களாக கண்ணீரோடு காட்சி தந்தனர். இமாம் எல்லோரையும் அமைதியடையுமாறு கோரினார். எல்லோரும் மௌனம் சாதித்தனர். இமாம் அல்லாஹ்வைப் புகழ்ந்து நபி மீது ஸலவாத்துக் கூறி மக்களை விழித்துப் பேசினார்:

“மக்களே... நான் அபூ தாலிபின் மகன் அலீயின் மகனாகிய ஹுஸைனின் மகனாகிய அலீ ஆவேன். எவரின் பொருட்கள் கொள்ளையிடப்பட்டதோ எவரின் குடும்பம் கைதியாகக் கட்டி இழுத்து வரப்படனரோ அவரின் புதல்வன் நான் ஆகவேன்> புறாத் நதிக் கரையினிலே படுகொலை செய்யப்பட்டவரின் புதல்வர் நான் ஆவேன்.

“மக்களே! நீங்கள் எனது தந்தைக்குக் கடிதம் எழுதினீர்கள். அவர் உங்களிடம் வந்த போது படுகொலை செய்தீர்கள் அல்லவா?

“மக்களே! மறுமை நாளில் நீங்கள் நபிகளாரின் முன்னால் எந்த முகத்தோடு செல்வீர்கள்? அவர்கள் உங்களிடம் என் குடும்பத்தினரைப் படுகொலை செய்தீர்களே> அவர்களது மரியாதையைக் களங்கப்படுத்தினீர்களே> நீங்கள் என் உம்மத்தைச் சேர்ந்தவர்கள் இல்லையா? என்று கேட்டால் என்ன பதில் கூறுவீர்கள்?”

இமாமின் ஈட்டி முனை போன்ற இந்த வசனங்கள் கூபா மக்களின் நெஞ்சங்களை குத்தின. கூபாவின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் மக்கள் கைசேதப்பட்டு ஓலமிடும் சப்தம் கேட்கலாயிற்று. நாமெல்லாம் அழிந்து போய்விட்டோம் என ஒருவருக்கொருவர் குற்றம் சொல்லிக் கூக்குரலிட்டனர். (12)

இமாம் இவ்வாறாக> தூங்கியிருந்த உள்ளங்களைத் தட்டி எழுப்பினார். கர்பலாவின் கோரங்களை உயிரோட்டமாக விபரித்தார். கூபாவாசிகளுக்கு அவர்கள் செய்த துரோகத்தின் தன்மையைப் புரிய வைத்தார்.

இமாம் ஹுஸைனின் குடும்பத்தினர் இப்னு சியாதின் அரண்மனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இமாம் ஸஜ்ஜாதைக் கண்ட இப்னு சியாத் கேட்டான்: “இவர் யார்?‖

“இவர் ஹுஸைனின் மகன் அலீ‖ -பதிலளித்தனர் சேவகர்கள். “ஹுஸைனின் மகன் அலீயை இறைவன் கொன்று விடவில்லையா?‖ இப்னு சியாத் ஆச்சரியமாக வினவினான்.

“அலீ என்ற பேரில் எனக்கு ஒரு சகோதரர் இருந்தார். அவரைத் தான் உம் ஆட்கள் கொலை செய்தனர்.‖ -இமாம் பதிலளித்தார்.

“இல்லை, இறைவன் தான் அவரைக் கொலை செய்தான்‖ என்றான் இப்னு சியாத். “மரணத்தின் போது அல்லாஹ் உயிர்களை எடுக்கிறான்‖ (13)என்ற குர்ஆன் வசனத்தை இமாம் ஓதினார்.

“எங்கள் முன்னால் பதில் சொல்லும் தைரியம் இன்னும் உம்மை விட்டுப் போகவில்லை போலும்‖ எனக் கர்ஜித்த இப்னு சியாத் இமாமைக் கொலை செய்யுமாறு கட்டளையிட்டான்.

ஹஸ்ரத் ஸைனப் வேங்கையாக எழுந்து நின்றார். “எங்களில் ஆண்கள் எவரையும் நீர் விட்டு வைக்கவில்லை. இவரைக் கொலை செய்வதாயின் எம் எல்லோரையும் சேர்த்தே கொலை செய்து விடும்‖ என ஆட்சேபித்தார்.

ஹஸ்ரத் ஸைனபைச் சாந்தப்படுத்திய இமாம் தாமே இப்னு சியாதின் முன் சென்று பேசலானார். “இப்னு சியாத் என்னைக் கொலை செய்வதாக என்ன அச்சுறுத்தலா விடுக்கிறீர்> கொல்லப்படுவது எமது வழமை. உயிர்த் தியாகம் செய்வதே எமக்குப் பெருமை என்பதை அறிய மாட்டீரோ?‖ (14)

ஷாம் தேசத்தில்

இமாமும் அவரது குடும்ப அங்கத்தினர் சிலரும் ஒரே கயிற்றால் கட்டப்பட்ட நிலையில் யஸீதின் அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டனர். யஸீதின் முன்

வீராவேசத்தோடு உரையாற்றிய இமாம்> "நாம் கயிறுகளால் கட்டியிழுத்துச் செல்லப்படும் இந்தக் கோலத்தை நபியவர்கள் கண்டால் எப்படியிருக்கும் என நினைக்கிறீர்?‖ எனக் கணை தொடுத்தார். இமாமின் இச்சிறிய வசனமானது அங்கு பிரசன்னமாகி இருந்தோரைக் கடுமையாகப் பாதிக்கச் செய்தது. விளைவு>எல்லோர் கண்களும் குளமாயின. (15)

ஷாமில் நடந்த சம்பவம் ஒன்றை ஒரு முஸ்லிமானவர் விபரித்துச் சொன்னார். 'முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தினர் கைதிகளாக ஷாம் கொண்டு வரப்பட்ட பொழுது அங்கு நானும் இருந்தேன்> கைதிகளாகப் பிடிபடுவோரை வழமையாகக் காட்சிக்கு வைக்கும் ஷாம் நகரக் கடைத் தெருக்கள்>பள்ளிவாசல் முற்றவெளி போன்ற பல இடங்களில் இவர்களும் நிறுத்தி வைக்கப்பட்டனர்.

அங்கு வயது முதிர்ந்த ஷாம் வாசி ஒருவர் முன்னே சென்று அவர்களை இழிவாக ஏசத் தொடங்கினார்.'உங்களையெல்லாம் அழித்து பித்னாவை முறியடித்த இறைவனுக்கே புகழனைத்தும்‖ என்றெல்லாம் தாறுமாறாகப் பேசினார். அவர் பேசி முடிந்ததும் இமாம் ஸெய்னுல் ஆப்தீன் அம் மனிதரைப் பார்த்துச் சொன்னார்:

"நீங்கள் பேசியவற்றை நாம் கேட்டுக் கொண்டு தானிருந்தோம்> உங்கள் மனதில் அடைத்து வைத்திருக்கும் வெறுப்பையும் குரோத எண்ணத்தையும் வெளிப்படுத்தினீர். இனி நாம் உமது பேச்சைக் கேட்டது போல நீரும் எமது பேச்சைச் செவிமடுப்பீர்‖ என்றார்> வயதானவரும் அதற்கு இணங்கினார்> இமாம் கேட்டார்:

"குர்ஆனை ஓதியதுண்டா முதியவரே?‖

"ஆம்‖

"என் குடும்பத்தினர்கள் மீது நீங்கள் அன்பு செலுத்த வேண்டும் என்பதைத் தவிர உங்களிடம் நான் எந்தப் பிரதி பலனையும் கேட்கவில்லை எனக் கூறுங்கள்‖ (16) என்று வரும் ஆயத்தை ஒதியதுண்டா?‖

"ஆம் ஒதியிருக்கிறேன்.‖

"அங்கு குறிப்பிடப்படும் நபியவர்களுடைய குடும்பத்தினர் நாங்கள் தாம் பெரியவரே.‖

"உற்றார்க்கு அவர் பங்கைச் செலுத்துங்கள்‖ (17)எனும் வசனம் ஒதியதுண்டா?‖

"ஆம்.‖

"உரிமைகளை வழங்குமாறு நபியவர்களுக்கு அல்லாஹ் கட்டளையிட்டது எம்மைப் பற்றித் தான்.‖

"உண்மையிலே அது நீங்கள் தானா?‖

"ஆமாம். கும்ஸ் பற்றிய ஆயத்தை ஓதியிருக்கிறீர்களா? நீங்கள் கனீமத்தாகப் பெறும் எதிலும் ஐந்தில் ஒரு பங்கு (கும்ஸ்) தூதருக்கும் அவரது குடுமபத்தினருக்கும் உள்ளது என்பதை அறிவார்களாக| (18) எனும் ஆயத்தைச் சொல்கிறேன்.‖

“ஏனில்லை. ஓதியிருக்கிறேன்.||

“அங்கு குறிப்பிடப்படும் குடும்பத்தினர் நாமே தான்.

“நபியின் குடும்பத்தினரே! உங்களிடமிருந்து அசுத்தங்களைப் போக்கி மிக்க பரிசுத்தவான்களாக ஆக்குவதற்கு விரும்புகின்றோம்.| (19) என்று வரும் பரிசுத்தமாக்கல்| பற்றிய ஆயத்தையும் ஓதியிருப்பீர்கள்.||

இவற்றையெல்லாம் செவிமடுத்த அந்த வயோதிபர் திகிலடைந்தார். வானத்தின் பால் இருகரங்களையும் ஏந்தி> “என் இறைவா! நான் தவ்பா செய்கிறேன். நபிகளாரின் குடும்பத்தினருக்கு இழிச் சொல் சொன்ன பாவியானேன். என்னை மன்னித்து விடுவாயாக. நான் எத்தனை முறை குர்ஆனை ஓதியிருப்பேன். ஆனால் இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் விட்டுவிட்டேனே|| எனக் கைசேதப் பட்டுக் கதறினார். (20)

ஷாம் பள்ளிவாசலில்

ஒரு முறை ஷாம் மஸ்ஜிதில் பிரசங்கம் செய்யும் ஒருவருக்கு தம் உபந்நியாசத்தில் இமாம்களான அலீயையும் ஹுஸைனையும் தூற்றிப் பேசுமாறு கட்டளையிட்டான் யஸீத். அந்தப் பேச்சாளரும் கட்டளைப் பிரகாரம் அன்னோர் மீது வசைபாடி முஆவியாவினதும் யஸீதினதும் புகழ்பாடினார்.

அங்கு பிரசன்னமாகியிருந்த இமாம் ஸஜ்ஜாத் உரத்த குரலில் சப்தமிட்டுச் சொன்னார்: பேச்சாளரே! மனிதர்களின் திருப்திக்காக இறை கோபத்தை ஏன் தேடிக் கொள்கிறீர். நரகத்தில் உம் இடத்தை இப்போதே ஒதுக்கிக் கொள்ள விரும்புகிறீர் போலும்.||

யஸீதைப் பார்த்துச் சொன்னார்: “அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் விதத்திலும் இங்குள்ள மக்களுக்கு நன்மை கிடைக்கும் வித்திலும் நான் இவர்களுக்கு உரையாற்றுகிறேன். மிம்பரில் ஏறுவதற்கு எனக்கு வழிவிடும்.||

யஸீதோ> இமாம் பிரசங்கம் செய்வதை விரும்பவில்லை. எனினும் மக்களோ இமாமை அனுமதிக்குமாறு யஸீதை வலியுறுத்தலாயினர். எனினும் யஸீதின் அபிப்பிராயம் இப்படி இருந்தது. அவர் மிம்பரில் ஏறினால் என்னையும் அபூ சுப்யானின் பரம்பரையினரையும் அவமானப்படுத்தாமல் இறங்க மாட்டார்.

“அவர் எதைத் தான் சொல்லுவார். அவர் இதெல்லாம் தெரிந்து வைத்திருப்பாரா?|| - மக்கள் சொன்னார்கள். “அவர் குழந்தைப் பருவத்திலேயே பாலோடு சேர்த்து ஞானத்தையும் அருந்தி வளரும் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பது தெரியாதா?|| யஸீத் கேட்டான்.

மக்களின் வலியுறுத்தல் அதிகரிக்கவே வேறு வழி இன்றி யஸீத் ஒப்புக் கொண்டான். இமாம் மிம்பரில் ஏறி உட்கார்ந்தார். ஹம்து ஸலவாத் சொல்லி உரை நிகழ்த்தினார். “ஆரம்பமுமி;ல்லாத> முடிவுமில்லாத அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்.

ஆரம்பம் இல்லாத ஆரம்பம் அவனே. முடிவில்லாத இறுதியும் அவனே. சிருஷ;டிகள் எல்லாம் அழிந்த பிறகு எஞ்சி நிற்பது அவன் மட்டுமே.‖ (21)

“மக்களே! அல்லாஹ் எமக்கு அறிவையும் பொறுமையையும் தாராளத் தன்மையையும் அழகிய பேச்சையும் மு..மின்கள் மத்தியில் கலப்பில்லாத அன்பையும் நட்பையும் அருளினான். இறைதூதர் (ஸல்) அவர்கள் எமது குடும்பத்தைச் சேர்ந்தவர். அமீருல் மு..மினீன் அலீயும் ஹம்ஸாவும் ஜ..பரும் எமது குடும்பத்தினர். இமாம்களான ஹஸனும் ஹுஸைனும் நபிகளாரின் குழந்தைகள். நம் குடும்பத்தவராவர்... (22)

“நான் மக்கா! மதீனா மற்றும் மினாவின் பிள்ளை. ஸம்ஸமின்> ஸபா மர்வாவின் குழந்தை> ஹஜருல் அஸ்வதைத் தூக்கி க..பாவில் வைத்தவரின் குழந்தை. (23) இஹ்ராம் கட்டித் தவாப் செய்யவும் ஸஈ செய்யவும் கற்றுத் தந்தவரின் குழந்தை நான். மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கும் அங்கிருந்து விண்ணுலகுக்கும் ஓரிரவில் பிரயாணம் மேற்கொண்டாரே அன்னவரின் குழந்தைகள் நாம். (24)

“மகத்தான இறைவனிடமிருந்து வஹி அறிவிக்கப்பட்டவரின் பிள்ளை நான். கர்பலாவில் படுகொலை செய்யப்பட்ட ஹுஸைனின் புதல்வன் நான் முஹம்மது முஸ்தபாவின் குழந்தை. நான் பாத்திமா ஸஹ்ராவின் பிள்ளை. தன் இரத்தத்திலேயே மூழ்கிப் போனவரின் குழந்தை நான்..‖ (25)

மக்கள் பரவசத்தோடு வைத்த கண் வாங்காமல் இமாமை உற்று நோக்கிய வண்ணம் இருந்தனர். இமாம் மொழிந்த ஒவ்வொரு வாக்கியத்திலும் தம் குடும்பத்தினரின் மகிமையையும் இமாம் ஹுஸைனின் தியாகத்தையும் பற்றி வலியுறுத்தினார்.

மக்களின் இதயங்கள் கனத்தன. கண்கள் குளமாயின. தொண்டை அடைக்க மஸ்ஜிதின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் விசும்பியழும் சப்தம் மெதுமெதுவாக ஆரம்பித்து வலுப் பெறலாயிற்று. இந்தக் காட்சி யஸீதை மேலும் ஆத்திரம் கொள்ளச் செய்தது. மக்களை அமைதிப்படுத்தி இமாமின் உரையை இடை நிறுத்துவதற்காக அதான் சொல்லுமாறு முஅத்தினுக்குப் பணித்தான்.

முஅத்தின் அதான் சொன்னார். அல்லாஹு அக்பர்..‖ இமாம் மிம்பரில் இருந்து சொன்னார். “ஆம். அல்லாஹ்வே மிகப் பெரியவன். அவனே மிக கண்ணியமானவன். அதியுயர்ந்தவன். அதிக கண்ணியத்துக்குரியவன். நாம் அஞ்சுகின்ற எல்லாவற்றையும் விடவும் உயர்ந்தவன்..‖

முஅத்தின்: “அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹ்.‖

இமாம்: அவனைத் தவிர இறைவனும் வணங்கத் தகுந்தவனும் இல்லையென சாட்சி பகர்கிறேன்.‖

முஅத்தின்: அஷ்ஹது அன்ன முஹம்மதன் றஸூலல்லாஹ்.‖

எல்லோர் பார்வைகளும் தாழ்ந்தன. நபிகளாரின் பெயர் கூறப்பட்ட போது மெதுவாக இமாமை நோக்கினர். நபிகளாரையே காண்பது போன்ற உணர்வை அவர்கள் பெற்றனர்.

இமாம் தலைப் பாகையைக் கையிலெடுத்தவாறு சொன்னார்.: "முஅத்தினாரே! அந்த முஹம்மதின் பேரால் கொஞ்சம் நிறுத்துங்கள்.||

முஅத்தின் நிறுத்தினார். மக்கள் சிலையாகினர். அதான் சொல்லியும் இமாமின் பேச்சை நிறுத்த முடியாதது கண்டு யஸீத் கடும் சினமுற்றான்.

இமாம் யஸீதைப் பார்த்துச் சொன்னார்: "யஸீதே! இந்த முஹம்மது எனது பாட்டனாரா? அல்லது உமது பாட்டனாரா?உனது பாட்டனார் எனச் சொல்வீராயின் நீ பொய் சொல்கிறாய் என்பது எல்லோருக்கும் தெரியும். எமது பாட்டனார் என்பதை ஏற்பீராயின் எனது தந்தையை ஏன் கொலை செய்தீர்? அவரது சொத்துகளை ஏன் சூறையாடினீர். அவரது குடும்பப் பெண்களை ஏன் சிறைப் பிடித்து இழுத்துச் செல்கிறீர்?.||

இவ்வளவையும் செய்து கொண்டு தானா அன்னாரை நபியெனப் போற்றுவீர். கிப்லாவை நோக்கியிருந்து தொழுகை நிறைவேற்றுவீர். என் பாட்டனாரும் தந்தையும் கியாம நாளில் உம்மை விட்டுவிட மாட்டார்கள்.||

இகாமத் சொல்லுமாறு முஅத்தினைப் பணித்தான் யஸீத். எனினும் மிகவும் மனமுடைந்த நிலையில் மக்கள் காணப்பட்டனர். சிலர் தொழுகையில் கலந்து கொள்ளாமலே மஸ்ஜிதை விட்டு வெளியேறினர். (26)

அந்தப் பிரயாணத்தின் போது இமாம் நிகழ்த்திய சொற்பொழிவுகள் முஸ்லிம் உம்மத்தில் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தின என்பதற்கு வரலாறு சான்றாகும்.

இமாம் ஸஜ்ஜாதைத் தீர்த்துக் கட்டும் நோக்கம் இருந்த போதிலும் அன்னாரையும் ஏனைய அஹ்லுல் பைத்தினரையும் எவ்வித தீங்குமின்றி மதீனாவுக்கு அனுப்பி வைக்க யஸீத் நிர்ப்பந்திக்கப்பட்டான்.

நீண்ட காலம் செல்ல முன்னரே உமையா ஆட்சிக்கெதிரான கிளர்ச்சிகள் இராக்கிலும் ஹிஜாஸிலும் வெடிக்கலாயின. பல்லாயிரக் கணக்கான மக்கள் கர்பலா ஷஹீதுகளின் இரத்தத்துக்கு நியாயம் கேட்டுப் புரட்சி செய்யலாயினர். இமாம் ஹுஸைனின் குடும்பத்தினர் கைதியாக்கப் பட்டு நடாத்தப்பட்ட அவலநிலை பற்றிய தகவல்களும், இமாம் ஸஜ்ஜாதும் ஹஸ்ரத் ஸைனபும் ஏனையோரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிகழ்த்திய உருக்கமான உரைகளும் இமாம் ஹுஸைனின் எழுச்சி இயக்கத்தை உயிர் பெறச் செய்திருந்தன.

நோய்வாய்ப்பட்டிருந்தாரா?

நான்காவது இமாமைப் பற்றிச் சொல்லும் போது> விவரமறியாத சிலர்> அவர் நோய்வாய்ப்பட்டிருந்தவர் என்ற எண்ணத்தையும் கூடவே கொண்டுள்ளனர். அன்னார் வாழ்நாள் பூராகவும் நோயாளியாகவே இருந்ததாகப் பலர் நினைப்பதுண்டு.

எனினும் இதன் உண்மை நிலை அவ்வாறன்று. கர்பலாவில் இமாம் ஹுஸைன் படுகொலை செய்யப்பட்ட நாட்களில் மாத்திரம் -சிறிது காலம் மட்டும்- நோய்வாய்ப் பட்டிருந்தார். இந்த நோய் மூலமாக அல்லாஹ் யஸீதின் கையாட்களால் கொலையுண்டாமல் அன்னாரைப் பாதுகாத்தான். அதன் மூலம் இமாமத் தொடரவும் முஸ்லிம் உம்மத்தின் எதிர்காலம் உறுதி செய்யப்படவும் வழிபிறந்தது.

இமாமின் நோய் பற்றிய சில றிவாயத்துகளைக் கவனிப்போம்:

‘சிம்ர்> இன்னும் சில சிப்பாய்களுடன் கூடாரங்களின் பக்கமாக வந்தான். அலீ இப்னுல் ஹுஸைன் நோயுற்றவராகப் படுக்கையில் இருந்தார்.|| (27)

“அலீ இப்னுல் ஹுஸைன் நோயுற்ற நிலையில் காணப்பட்டதால் அவரைக் கொலை செய்யாது விட்டனர்.|| (28)

“இமாம் ஹுஸைனின் ஷஹாத்தைத் தொடர்ந்து சிம்ர்> அலீ இப்னுல் ஹுஸைனை நோக்கி வந்தான். அவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தார். தன் காவலாளர்களிடம் அவரையும் கொன்று விடுமாறு பணித்தான். அவர்களில் ஒருவர்> ஸுப்ஹானல்லாஹ்! இந்த நோயாளியை யுத்தத்திலும் கலந்து கொள்ளாத ஒருவரைக் கொலை செய்வதா?||எனக் கேட்டான்.

“அவ்வேளை உமர் பின் ஸஅத் அங்கு வந்தான். இந்த நோயாளியின் மீதும் பெண்கள் மீதும் யாரும் கைவைக்கக் கூடாது எனக் கட்டளையிட்டான்.|| (29)

கூபாவுக்கு வந்து சேரும் வரை இந்த நோய் அவரில் காணப்பட்டதாக சிலர் கருதுவர். (30)

இந்தச் சில நாட்களைத் தவிர வாழநாள் பூராகவும் நோயாளியாக இருந்தார் என்பதற்கு எவ்வித வரலாற்று ஆதாரமும் கிடையாது. ஏனைய இமாம்களைப் போன்றே இமாம் ஸஜ்ஜாதும் நல்ல தேகாரோக்கியத்தோடு இமாமத்துக்குரிய கடமைகளை நிறைவேற்றி வந்தார்கள். (31)

ஆட்சியாளர்களுடன்

தமது இமாமத்தின் காலத்தில் இமாம் ஸஜ்ஜாத் ஆட்சியாளர்கள் பலரையும் எதிர்கொண்டார். யஸீத்> அப்துல்லாஹ் இப்னு ஸுபைர்> மர்வான் இப்னு ஹகம்> அப்துல் மலிக் இப்னு மர்வான்> வலீத் இப்னு அப்துல் மலிக் முதலியோர் இமாமின் காலத்தில் ஆட்சி நடத்தியவர்கள். இந்த அநியாயக்கார ஆட்சியாளர்களின் அடாவடித்தனங்களை அறிவது அக்கால சூழ்நிலைகளை ஓரளவுக்கு விளக்கப் போதுமானது.

இமாம் ஹுஸைனின் படுகொலைக்குப் பின்னர் ஹிஜ்ரி 62ம் ஆண்டு மதீனாவின் முக்கியஸ்தர்கள் சிலர்; ஷாம் நகர் சென்றனர். யஸீதின் சமய மாறுபாடான நடவடிக்கைகளை> -மது அருந்துதல்> நாய்களுடன் விளையாடுதல்> இரவு பகல் என்றில்லாமல் கேளிக்கைகளில் மூழ்கியிருத்தல் போன்றவற்றை- நேரடியாகக் கண்டுவந்து மதீனாவில் மக்களிடம் தெரியப்படுத்தினர். ஏற்கனவே இமாம்

ஹுஸைனின் படுகொலையால் ஆத்திரமுற்றிருந்த மதீனா வாசிகள் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். (32)

முஸ்லிம் இப்னு உக்பா எனும் கொடுங்கோள் தளபதியின் கீழ. யஸீதின் படை மதீனாவுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டது. கிளர்ச்சியை ஒடுக்குவதே அவர்களின் பணியாக இருந்தது. மதீனாவில் மூன்று நாட்களாக இந்தப் படை புரிந்த அட்டகாசத்தில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மதீனாவாசிகள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்கள் எந்த அட்டூழியத்தையும் அக்கிரமத்தையும் விட்டு வைத்தாகத் தெரியவில்லை. (33)

ஹிஜ்ரி 64இல் யஸீதின் மரணத்தைத் தொடர்ந்து அவரது மகன் முஆவியா ஆட்சி பீடமேறினார். எனினும் மிகக் குறுகிய காலமே ஆட்சி செய்த முஆவியா இப்னு யஸீத் - நாற்பது நாட்கள் அல்லது வேறொரு தகவலின் படி மூன்று மாத காலம்- அரசுப் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார். (34)

யஸீதின் மரணத்தைத் தொடர்ந்து, கிலாபத்தின் மீது நீண்ட காலமாகக் கண்வைத்திருந்த அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் மக்காவில் தன்னை கலீபாவாகப் பிரகடனம் செய்தார். ஹிஜாஸ்> யமன்> இராக் மற்றும் குராஸான் மக்கள் அவருக்கு பைஅத் செய்தனர். யஸீதின் மகன் முஆவியா ஆட்சிப் பொறுப்பிலிருந்து ஒதுங்கிக் கொண்ட பிறகு தந்திரமாக அந்த இடத்தைக் கைப்பற்றினார் மர்வான் பின் ஹகம். ஷாமையும் மிஸ்ரையும் பல தந்திரங்கள் மூலம் தன் ஆட்சிக்குள் கொண்டு வந்த மர்வான் நீண்ட காலம் ஆட்சியில் இருக்காது மரணித்தார். மர்வானுக்குப் பிறகு ஆட்சி பீடமேறியது அவரது; புதல்வன் அப்துல் மலிக். (35)

ஹிஜ்ரி 65இல் அப்துல் மலிக் ஆட்சிக்கு வந்தார். தனது ஆட்சியைப் பலப்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்திய அவர்>ஷாமிலும் மிஸ்ரிலும் தனது அதிகாரத்தை ஸ்திரப் படுத்திக் கொண்டார். பின்னர் மக்கா மீது படையெடுத்து அந்நகரை முற்றுகையிட்டு அப்துல்லாஹ் இப்னு ஸுபைரைக் கைது செய்து படுகொலை செய்தார். (36)

கஞ்சத்துக்கும் வஞ்சத்துக்கும் பெயர் பெற்றவர் அப்துல் மலிக். ஸஃது இப்னு முஸய்யபிடம் ஒரு முறை இவ்வாறு கூறினார்: “எனது நிலை இப்போது எத்தகையது எனில் நல்ல காரியங்கள் செய்வதால் எனக்கு மகிழ்ச்சி வருவதே கிடையாது. கெட்ட காரியங்கள் செய்வதாலோ மனது சஞ்சலிப்பதே இல்லை..‖ இதனைக் கேட்ட ஸஃது இப்னு முஸய்யப் இப்படிக் கூறினார்: “உமது இதயம் முழுமையாகச் செத்துவிட்டது என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

‖அப்துல்லாஹ் இப்னு ஸுபைரைப் படுகொலை செய்த பின்னர் செய்த பிரசங்கம் ஒன்றில் அப்துல் மலிக் பின்வருமாறு கூறினார்: “தக்வாவின் பாலும் நற்காரியங்கள் பாலும் என்னை யாராவது அழைத்தால் அவரின் தலையைக் கொய்து விடுவேன்.‖ (37)

அப்துல் மலிக்கின் அடாவடித்தனத்துக்கு அடையாளமாக> கூபாவிலும் பஸராவிலும் அவரது தளபதியாக நியமிக்கப்பட்ட ஹஜ்ஜாஜ் இப்னு யூஸுப் ஸகபீ திகழ்ந்தார்.

உமையா வம்ச ஆட்சியில் அதிக இரத்தப் பசியும் கொலை வெறியும் கொண்ட மூர்க்க குணம் படைத்த தளபதி என வரலாறு இவரைப் பற்றி பதிவுசெய்து வைத்திருக்கிறது. மக்களை இம்சைக்குள்ளாக்குவதிலும் சித்திரவதை செய்வதிலும் படுகொலை செய்வதிலும் குறிப்பாக நபியவர்களின் குடும்பத்தினரான ஹாஷிமிக்களையும் இமாம் அலீ அவர்களின் நேசர்களையும் வதை செய்வதில் பெரும் இன்பம் கண்டார். அவரது காலப் பிரிவில் ஒரு லட்சத்து இருபதினாயிரத்துக்கும் மேற்பட்டோரைப் படுகொலை செய்த சாதனை|யாளர். (38)

அப்துல் மலிக்> இமாம் ஸஜ்ஜாத் அவர்களைக் கடுமையாகக் கண்காணித்து வந்தார். இமாமின் நடவடிக்கைகளில் ஏதாயினும் ஒரு தப்பு காணக் கிடைத்தால் அதனைச் சாட்டாக வைத்து இமாமை இழிவு படுத்தவும் அவர் மீது கட்டுப்பாடுகளை அதிகரிக்கவும் சந்தர்ப்பம் தேடிய வண்ணம் இருந்தார்.

இமாம் ஸஜ்ஜாத் தம்மிடமிருந்த ஓர் அடிமைப் பெண்ணை விடுதலை செய்து> பின்னர் அப்பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இது அப்துல் மலிக்கின் ஒற்றர்களின் வாய்க்கு அவல் கிடைத்தது போலாயிற்று. உடனடியாக மன்னருக்குத் தகவல் அனுப்பினர்.

அப்துல் மலிக் சுடச் சுட இமாமுக்கு ஓலை அனுப்பினார்: தாங்களே விடுதலை செய்த அடிமைப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டதாகக் கேள்விப்பட்டேன். குறைஷிக் கோத்திரத்தைச் சேர்ந்த கௌரவமான பெண்கள் எவ்வளவோ பேர் இன்னும் இருக்கின்றனர். அவர்களை மணம் செய்வது தங்களது மாண்புக்குப் பொருத்தமானது. மேலும் அவர்கள் மூலம் கிடைக்கும் குழந்தைகள் மிகச் சிறந்த வம்சத் தொடர்பையும் பெற்றிருப்பர். எனினும் தாங்களோ தங்களது மதிப்பைப் பற்றிக் கரிசனை கொள்ளவுமில்லை. தங்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு கௌரவமான வம்சத்தையும் ஏற்படுத்தவில்லை. வஸ்ஸலாம்.||

இமாம் பதில் வரைந்தார்: "தங்கள் கடிதம் கிடைத்தது. நானே விடுதலை செய்த பெண்ணைத் திருமணம் செய்வதைக் குறையாக எழுதியிருந்தீர். மற்றும் குறைஷிக் குலப் பெண்களை முடிப்பதால் என் சிறப்பும் குழந்தைகளின் குலச் சிறப்பும் ஓங்கும் எனவும் தெரிவித்திருந்தீர்.

அல்லாஹ்வின் தூதரை விட சிறப்புப் பெற்றவரும் அவரது குடும்பத்தினரை விட மாண்புற்றவரும் வேறில்லை என்பது தங்களுக்குத் தெரிந்ததே. திருமணம் செய்வதால் நாம் சிறப்புப் பெறும் அளவுக்கு எம்மை விடவும் குலப் பெருமையுள்ளவர் யார் உளர்? மேலும்> ஒருவர் இஸ்லாத்தில் இணைவதன் மூலம் அல்லாஹ் அவரது குறை குற்றங்களை நீக்கி விடுகிறான். முஸ்லிமான எவரும் கௌரவானவரே. அவரது சமூக> பொருளாதார நிலைமைகள் கவனத்திற் கொள்ளப் படுவதில்லை. அத்தகைய ஒரு முஸ்லிமை மணம் செய்து கொள்வதில் எந்தச் சிறப்பும் குறைந்து விடுவதில்லை.|| (39)

இமாமை அவமதிக்கவும் மக்கள் மத்தியில் அச்சத்தை விளைவிக்கவும் அரச விரோத செயல்களில் ஈடுபடாமல் தடுப்பதற்கும் விரும்பிய அப்துல் மலிக்> இமாம் ஸஜ்ஜாதை பலவந்தமாக ஷாம் தேசத்துக்கு வரவழைத்தார். பின்னர் மீண்டும் மதீனாவுக்கு அனுப்பி வைத்தார். (40)

அப்துல் மலிக்கின் மறைவுக்குப் பின்னர் அவரது மகன் வலீத்> ஹிஜ்ரி 86இல் ஆட்சியில் அமர்ந்தார். ஜலாலுத்தீன் ஸுயூத்தீ> வலீதைப் பற்றி விவரிக்கையில்> "வலீத் ஓர் அநியாயக்கார அடக்குமுறையாளர்|| என்கிறார். (41)

தனது முதலாவது சிம்மாசன உரையில் வலீத் கூறியதாவது: "எமக்கு எதிராக யாரும் அத்துமீறி நடந்தால் அவரை நாம் கொலை செய்வோம். எவராயினும் மௌனம் சாதித்தால் அவரது மௌனமே அவரைக் கொன்று விடும்.|| (42)

ஏனைய கொடுங்கோலர்களைப் போலவே வலீதும் இமாமின் புகழைக் கண்டு அஞ்சினான். அன்னாரது ஆன்மீக மற்றும் அறிவு மேன்மையை வலீதால் சகித்துக் கொள்ள முடியவில்லை. மக்கள் இமாம் ஸஜ்ஜாதைப் பின்தொடர முற்பட்டால் அது ஆட்சியதிகாரத்துக்கு அச்சுறுத்தலாகி விடும் எனப் பயந்த வலீத் நான்காவது இமாமைத் தீர்த்துக் கட்ட முடிவு செய்து தந்திரமான முறையில் நஞ்சூட்டினான். (43)

ஹஸ்ரத் ஸஜ்ஜாத் அவர்கள் வாழ்ந்த காலம் பல்வேறு பட்ட அரசியல்> சமூக நெருக்கடிகளும் தளம்பல்களும் நிறைந்து காணப்பட்டது. கொடுங்கோல் ஆட்சியாளர்கள் இமாமின் நடவடிக்கைகளை அச்சத்தோடு கடுமையாகக் கண்காணித்து வந்தனர். இமாமுடன் இணைந்து தியாக சிந்தையுடன் செயற்படக் கூடிய போராளிகளும் அவரோடு காணப்படவில்லை.

இந்நிலையில் போராட்டம் நடாத்துவதை விட்டு அறிவுப் பணியும் ஆன்மீகப் பணியும் ஆற்றி மாணாக்கரைப் பயிற்றுவிப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்துவதை இமாம் தேர்ந்தெடுத்தார் எனலாம்.

ஒரு முறை மக்காவுக்குச் செல்லும் வழியில் ஒருவர் இமாமை மறித்து ஆட்சேபணை தெரிவித்தார்: "ஜிஹாதையும் அதன் கஷ்டங்களையும் கைவிட்டு மிக லேசான ஹஜ்ஜைத் தெரிவு செய்திருக்கிறீர்கள் போலும்.||

இமாம் சொன்னார்: உறுதியான விசுவாசமும் தியாக உணர்வும் மிக்க போராளிகள் என்னோடு இருப்பார்கள் எனின் நிச்சயமாக ஹஜ்ஜை விட போராடுவதே சிறந்ததாக இருக்கும்.|| (44)

"மக்காவிலோ> மதீனாவிலோ நம்பிக்கைக்குரிய போராளிகள் இருநூறு பேரைக் கூட காணக் கிடைக்க வில்லை|| என இமாம் ஸஜ்ஜாத் கூறியதாக அபூ உமர் நஹ்தீ தெரிவித்தார். (45)

சிரியர்கள்

கர்பலாவில் நடந்த கோரச் சம்பவத்தின் பிறகு மதீனாவுக்குத் திரும்பிய இமாம்> ஹதீஸ்களை அறிவிப்பதிலும் மாணவர்களுக்கு இஸ்லாமிய அறிவு

ஞானங்களைப் போதிப்பதிலும் கூடிய கவனம் செலுத்துவதை தமது பிரதான நடவடிக்கையாக மேற்கொண்டு வந்தார்.

இமாமின் சீடர்களாக இருந்த அல்லது இமாமிடம் இருந்து ஹதீஸ்களை றிவாயத் செய்த 170 பேரின் பெயர் விபரங்களை ஷெய்க் தூஸீ பதிவு செய்துள்ளார். (46)

அவர்களில் முக்கியமான மூவர் பற்றிய சிறு விபரம் பின்வருமாறு:

ஸயீத் இப்னு முஸய்யிப்: இவர் பற்றி இமாம் செய்னுல் ஆபிதீன் கூறுவதாவது: ஸயீத் கடந்த கால நிகழ்வுகள் பற்றி மற்றவர்களை விடக் கூடுதலாகத் தெரிந்து வைத்திருந்தார். அவரது சமகாலத்தில் அவரை விட அறிஞர் இருக்கவில்லை.|| (47)

அபூ ஹம்ஸா ஸுமாலீ:

இவர் பற்றி எட்டாவது இமாம் இவ்வாறு விபரித்தார்: “ஸல்மான் அவரது காலத்தில் எப்படி இருந்தாரோ அபூ ஹம்ஸாவும் தமது காலத்தில் அவ்வாறு தான்; காணப்பட்டார்.|| (48)

ஸயீத் இப்னு ஜுபைர்:

“ஜுபைரின் மகனிடம் அறிவு பெறத் தேவையில்லாத எவரும் பூமியில் இருக்கவில்லை” எனக் கூறும் அளவுக்கு ஸயீத் அறிவு ஞானத்தில் மிகைத்துக் காணப்பட்டார். (49)

இமாம் ஸஜ்ஜாதிடம் சீடராக இருந்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்ட ஸயீதை, ஹஜ்ஜாஜ் ஸகபீயின் முன் கொண்டு வந்து நிறுத்தினர்.

“நீ ஸயீத் இப்னு ஜுபைர் அல்ல. “ஷகீ இப்னு கஸீர் ஆவீர்|| (50) என்று ஹஜ்ஜாஜ் அவரை ஏளனமாக விளித்தான்.

“என்னை ஸயீத் என்று பெயரிட்ட எனது தாயாருக்கு இவை நன்கு தெரிந்திருக்கும்.|| - இது ஸயீதின் அனல் தெறிக்கும் பதில்.

ஹஜ்ஜாஜ் விடவில்லை. “அபூபக்ர்> உமர் பற்றி என்ன நம்பிக்கை வைத்துள்ளீர்? சுவர்க்கத்தில் உள்ளார்களா? நரகத்தில் உள்ளார்களா?|| (இந்தக் கேள்விக்கு ஸயீத் அளிக்கும் பதிலைக் காரணமாக வைத்து அவரைக் கொலை செய்து விடலாம் என்ற எதிர்பார்ப்பிலேயே இவ்வாறு கேட்கப்பட்டது.)

ஸயீத்: “நான் சுவர்க்கத்துக்குப் போனால் அங்குள்ளவர்கள் யார் என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். நரகத்துக்குப் போனால் அங்குள்ளவர்கள் யார் என்பதை அறிந்து கொள்ள முடியும்.||

ஹஜ்ஜாஜ்: கலீபாக்கள் பற்றி உமது கருத்து என்ன?

ஸயீத்: நான் அவர்களுக்காகப் பேசுபவன் அல்ல.

ஹஜ்ஜாஜ்: கலீபாக்களில் யாரை நீர் அதிகம் நேசிக்கிறீர்?

ஸயீத்: எவரை இறைவன் நேசிக்கிறானோ அவரை.

ஹஜ்ஜாஜ்: சரி> இறைவன் அவர்களுள் எவரை அதிகம் நேசிக்கிறான்.

ஸயீத்: எல்லா மறைவான விடயங்களையும் அறிந்த அல்லாஹ்வுக்கு மட்டுமே அது தெரியும். (51)

ஹஜ்ஜாஜ்: ஏன் உன் முகத்தைச் சிரிப்பைக் காணவில்லை.

ஸயீத்: மண்ணால் என்னை இறைவன் படைத்தான். ஆனால் நெருப்பு என்னை எரித்து விடலாம். இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது.

ஹஜ்ஜாஜ்: நாங்கள் சந்தோசமாக இருக்கிறோமே.

ஸயீத்: மனிதர்களின் உள்ளங்கள் ஒரே மாதிரியாக இல்லை.

ஹஜ்ஜாஜ்: நீர் எவ்வாறு கொலை செய்யப்பட வேண்டும் என விரும்புகிறீர்.

ஸயீத்: நீர் விரும்புகின்றவாரே செய். இறைவன் மீது ஆணையாக> என்னை எவ்வாறு கொலை செய்கின்றீPரோ அவ்வாறே இறைவன் மறுமையில் உம்மை தண்டிப்பான்.

ஹஜ்ஜாஜ்: உம்மை நான் மன்னிப்பதை விரும்ப மாட்டீரா?

ஸயீத்: மன்னிப்பு அல்லாஹ்விடம் மட்டும் கேட்பேன். ஒரு போதும் உம்மிடம் மன்னிப்புக் கேட்க மாட்டேன்.

ஸயீதைக் கொலை செய்ய ஆயத்தமாகுமாறு கட்டளை பிறப்பித்தான் ஹஜ்ஜாஜ். ஸயீத் ஓதினார். "வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்தோனின் பக்கம் என் முகத்தைத் திருப்பினேன். நான் தூய்மையானவன். நான் முஸ்லிம் ஆவேன். இணைவைக்கிறவர் அல்லேன்.|| (52)

ஹஜ்ஜாஜ்: அவரது முகத்தை கிப்லாவுக்கு மறுபக்கமாகத் திருப்புங்கள்.

ஸயீத்: "உங்கள் முகங்களை எங்கு திருப்பினும் அல்லாஹ் அங்கு இருக்கிறான்.|| (53)

ஹஜ்ஜாஜ்: முகத்தை நிலத்தில் வையுங்கள்.

ஸயீத்: "அதிலிருந்தே உங்களை நாம் சிருஷ;டித்தோம். அதற்கே மீண்டும் கொண்டு வருவோம். அதில் இருந்தே மீண்டும் ஒரு முறை உங்களை வெளியாக்குவோம்.|| (54)

ஹஜ்ஜாஜ்: கழுத்தைத் துண்டித்து விடுங்கள்.

ஸயீத்: "ஏக இறைவனைத் தவிர வேறு நாயன் இல்லை. அவனே இணையில்லாத ஏகன். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அவனது அடியாரும் திருத் தூதரும் ஆவார். இறைவா! எனக்குப் பிறகு எவர் மீதும் அநியாhயம் செய்வதற்கு இவனை விட்டு வைக்காதே யா அல்லாஹ்."

சிறிது நேரத்தில் ஸயீத் இப்னு முஸய்யபின் பரிசுத்த இரத்தத்தால் தன் சரித்திரத்தைத் தோய்த்துக் கொண்டான் ஹஜ்ஜாஜ். (55) அவர் கொல்லப்படக் காரணம் இமாம் ஸஜ்ஜாதுடன் கொண்டிருந்த தொடர்பே என்பதை ஹஜ்ஜாஜ் கூட வலியுறுத்தியிருந்தார். (56)

ஸஹீபா ஸஜ்ஜாதிய்யா

துன்ப துயரங்களின் போதும் விடிவுக்கு வழி தெரியாது நெருக்கடிகளால் சோதிக்கப்படும் போதும் இறையருளையும் கருணையையும் வேண்டி இருகரமேந்திப் பிரார்த்திப்பது மனித இயல்போடு ஒட்டியதாகும்.

இவ்வாறு தம் பிரச்சினைகளை> உளக் குமுறல்களை சர்வ வல்லமையும் கொண்ட இறைவனிடம் சமர்ப்பித்து அவனது கருணைக் கடலில் மூழ்கி எழுகின்ற போது, சளைப்பும் சலிப்பும் தட்டிய உள்ளங்கள் அமைதியும் விசுவாசமும் அடைகின்றன. உறுதியும் திடமும் புடமிடப்படுகின்றன.

மனித உள்ளத்துக்கு சிறந்த சஞ்சீவி மட்டுமின்றி நலிவடைந்த உள்ளத்தைப் பொழிவடையச் செய்யும் சிறந்த ஊக்கி பிரார்த்தனையே என்பது உளவியல் நிபுணர்கள் ஏகோபித்து அங்கீகரித்த உண்மையாகும்.

இந்த மனித இயல்பை இஸ்லாம்> அவனுக்கு நேர்வழியைக் காட்டவும் அறிவூட்டிப் பயிற்றுவிக்கவும் பயன்படுத்துகிறது. இஸ்லாமியப் பெரியார்கள் மற்றும் வழிகாட்டிய இமாம்கள் போன்றோர்> பல்வேறுபட்ட தமது பிரார்த்தனைகள் இரைஞ்சுதல்கள் மற்றும் தோத்திரங்கள் மூலமாக சரியானதும் மிகத் தெளிவானதுமான ஞானங்களையும் நம்பிக்கைகளையும் தம்மைப் பின்தொடர்ந்தவர்களுக்கு விட்டுச் சென்றுள்ளனர். மனிதர்களது சிக்கல்களுக்குத் தீர்வும் நோய்களுக்கு நிவாரணியும் அவற்றில் காணக் கிடைக்கின்றன.

ஒரு பிரபல சிந்தனையாளர் இது பற்றி இவ்வாறு எழுதுகிறார்: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி மற்றும் தூய இமாம்கள் ஆகியோர் தமது அறிவு மற்றும் ஆத்மீக ரீதியான மிகச்சிறந்த பொக்கிஷங்களை பிரார்த்தனைகளின் வடிவில் எமக்கு விட்டுச் சென்றுள்ளனர்.

இந்த துஆக்களில் ஏகத்துவம்> இறையியல்> நபித்துவம்> இமாமத்> இஸ்லாமிய ஆட்சி முறை> அழைப்பு> ஒழுக்கம்>சிவில் சட்டம்> மார்க்க நடைமுறைகள். பழக்கவழக்கங்கள் என இனனோரன்ன அம்சங்கள் பிரதிபலிக்கின்றன. மேற்கூறிய பிரார்த்தனைகள் முஸ்லிம்களது சிந்தனா வளர்ச்சியிலும் ஆத்மீக அபிவிருத்தி யிலும் சமூக> பண்பாட்டு;ப் பயிற்சியிலும் அளப்பரிய பங்காற்றும் சக்தியாக விளங்குகின்றன. அவற்றைச் சிறப்புறப் புரிந்து கொள்ளாத வரை முஸ்லிம் தனது ஆளுமையின் முழுமையை அடைந்து கொள்ள முடியாது.‖

நான்காவது இமாம் ஹஸ்ரத் ஸெய்னுல் ஆபிதீன் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் துஆக்கள் அடங்கிய ‘அல்-ஸஹீபா அல்-ஸஜ்ஜாதிய்யா| என அழைக்கப்படும் தொகுப்பும் இந்த வகையான துஆக்களில் சேர்ந்ததாகும்.

ஜவாஹிர்;| எனப்படும் பிரபல தப்ஸீரை எழுதிய அஹ்லுஸ் ஸுன்னா அறிஞருக்கு ஒரு முறை ‘கும்’ஞானபீடத்திலிருந்து மேற்படி ஸஹீபா ஸஜ்ஜாதிய்யாவின் பிரதியொன்று அனுப்பி வைக்கப்பட்டது.

அதனை வாசித்த பின்னர் அவர் பின்வருமாறு எழுதினார்: “எனது கைகளில் கிடைத்த இந்நூல் மிகப் பெறுமதி வாய்ந்தது. எந்த நூலிலும் கிடைக்காத அளவு இஸ்லாமிய அறிவு ஞானங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. நபியவர்களின் குடும்பத்தினரின் உயரிய பாரம்பரியங்களைச் சேர்ந்த இந்நூல் இது வரை காலமும் எமக்குக் கிடைக்காமற் போனது எமது துரதிஷ்டமாகும். அதை நான் ஆழ்ந்து நோக்குகின்ற போதெல்லாம் மனிதனால் கூற முடிந்த உயரிய வசனங்களை அதில் கண்ணுற்றேன். இவ்வளவு அற்புதமான இப்புத்தகத்தை எனக்குப் பரிசளித் தமைக்காக இறைவன் தங்களுக்கு அதிசிறந்த கூலியைத் தருவான்.‖ (57)

ஸஹீபா ஸஜ்ஜாதியா எனும் இந்த துஆக்களின் தொகுப்பில் காணப்படும் துஆக்கள் சிலவற்றின் பெயர் அட்டவணையை இங்கு தருகிறோம்:

1. இறை புகழ்.

2. நபிகளார் மற்றும் குடும்பத்தினரின் கீர்த்தனை.

3. அர்ஷைச் சுமக்கும் மலக்குகளின் புகழாரம்

4. நபிமார்களைப் பின்தொடர்ந்தோருக்கு இறையருளைக் கோரல்.

5. தமக்கும் சீடர்களுக்கும் இறையருள் கோரல்.

6. காலை> மாலை பிரத்தியேக பிரார்த்தனை.

7. கவலை தரும் நிகழ்ச்சியைச் செவியுற்றால்

8. தப்பான குணங்கள் மற்றும் கெட்ட செயல்களில் இருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடல்.

9. பாவமன்னிப்புக் கோரல்.

10. இறைவனிடம் சரணாகதி அடைதல்.

11. நல்ல முடிவைக் கோரல்.

12. பாவத்தை ஏற்றலும் அதிலிருந்து மீளக் கோரலும்.

13. தேவைகளை நிறைவேற்றக் கோரல்.

14. அநியாயக்காரர்களின் தொல்லைகளுக்கு இலக்காகும் போதும் அநியாயங்களைக் காணும் போதும் அன்னார் செய்த பிரார்த்தனைகள்.

15. தமக்கு நோய் அல்லது கவலை ஏற்பட்ட போது ஓதியவை.

16. தான் முன்னர் செயத தப்புகளுக்கு மன்னிப்புக் கோரல்.

17. ஷைத்தானிடமிருந்தும் அவனது ஊசலாட்டங்களில் இருந்தும் இறைவனிடம் பாதுகாப்புத் தேடல்

18. ஒரு தடங்கல் அல்லது ஆபத்து நீங்கிய போதும் தேவைகள் விரைவில் கைகூடிய போதும் ஓதியது.

19. நற்குணங்களை வேண்டி ஓதிய துஆ.

20. கவலை தரும் ஏதும் நிகழ்ந்த போது.

21. பிரச்சினைகளும் நெருக்கடிகளும் அதிகரித்த போது.

22. மழை தேடி ஓதிய துஆ.

23. தேக சுகத்தை வேண்டலும் அது கிடைத்தமைக்கு நன்றி கூறலும்.

24. பெற்றோர்களுக்காகக் கேட்ட துஆ.

25. பிள்ளைகளுக்காகக் கேட்டது.

26. அயலவர்கள் மற்றும் நண்பர்களுக்காக.

27. இறைவனிடத்மதில் தம் அடிமைத்தனத்தையும் பக்தி விசுவாசத்தையும் வெளிப்படுத்தல்.

28. இஸ்லாமிய ஆட்சியின் காவலர்களுக்காக.

29. உணவில் நெருக்கடி தோன்றும் போது.

30. கடனை அடைப்பதற்கு இறையுதவியை நாடல்.

31. தவ்பா.

32. தஹஜ்ஜத் தொழுகையின் பின் ஓதும் துஆ.

33. நன்மையை வேண்டுதல்.

34. பாவமான காரியங்களைக் காணும் போது.

35. மன நிறைவின் போதும் உலகாசைக் காரர்களின் கவலையைக் காணும் போதும்.

36. இடி மின்னலின் போது.

37. இறையருளுக்கு நன்றி கூறுவது.

38. அல்லாஹ்வின் அடியார்களுக்கு அவர்களின் உரிமையில் தவறு செய்து விட்டால்.

39. இறையருளும் மன்னிப்பும் கோரலும்.

40. மரணம் பற்றிய நினைவு அல்லது செய்தி வந்தால்.

41. பாவங்களிலிருந்து விடுதலை தேடல்.

42. குர்ஆனை ஓதி தமாம் செய்யும் போது.

43. தலைப் பிறையைக் கண்டால்.

44. றமழான் ஆரம்பிக்கும் போது.

45. றமழான் முடியும் போது.

46. பெருநாள் மற்றும் ஜும்ஆ தினங்களில்.

47. அரபா தினத்தில்.

48. எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்கக் கோரல்.

49. ஹஜ் பெருநாள்.

50. இறையச்சத்தை வெளிப்படுத்தல்.

51. மன்றாட்டம்.

52. மன்றாடி மன்னிப்புக் கோரல்.

53. பணிவும் தாழ்மையும்.

54. துன்பங்களை விலக்கக் கோரல்.

இமாம் ஸஜ்ஜாத் அவர்கள் ஓதி வந்த துஆக்களின் இத் தொகுப்புக்கு அரபு> பாரசீக மொழிகளில் பல்வேறு விரிவுரைகள் எழுதப்பட்டுள்ளன. அல்லாமா ஷெய்க் ஆகா புஸுர்க் தெஹ்ரானீ தமது ‘அல் தரீஆ| (58)எனும் நூலில் அத்தகைய 70வியர்கியானங்களின் பெயர் விபரங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

றிஸாலத்துல் ஹுகூக்

இமாம் ஸஜ்ஜாத் அலைஹிஸ்ஸலாம் அவர்களது சிந்தனைகளில் தோன்றிய மிக முக்கியமான ஒரு தொகுப்பு‘றிஸாலத்துல் ஹுகூக்| எனப்படும் கடமைகள் பற்றிய விளக்கமாகும். ஷீயாக்களின் பழைய கிரந்தங்களில் இது பற்றிக் கூறப்பட்டுள்ளது. ‘துஹபுல் உகூல்| எனும் கிரந்தத்தில் மேற்படி றிஸாலத்துல் ஹுகூக் முழமையாகச்; சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. மன்லா யஹ்ழுருஹுல் ஃபகீஹ்|> ஹிஸால்| மற்றும் ஆமாலீ| கிரந்தங்களிலும் றிஸாலத்தின் சுருக்கம் காணப்படுகிறது. (59) அதில் சில பகுதிகளை இங்கு தருகிறோம்:

அல்லாஹ்வின் மீதான கடமை:இறைவன் மீதான கடமை அவனை வணங்கி வழிபடுவதும் இணைவைக்காதிருப்பதும் ஆகும். உளத் தூய்மையோடு அவற்றை நிறைவேற்றும் போது உமது இம்மை, மறுமை விடயங்களை சிறப்பாக்கித் தருவான்.

நப்ஸ்: நப்ஸ் மீதான கடமை அதை இறைவனுக்கு அடிபணிய வைத்தலாகும்.

நாவு: நாவு மீதான கடமை கெட்ட பேச்சுகளிலிருந்து பாதுகாத்தல். நல்லதே பேச அதனைப் பழக்கிக் கொள்ளல். பிரயோசனமற்ற பேச்சுக்களில் இருந்து தவிர்த்தல்> மனிதர்களைப் பற்றி நல்லதையே பேசல்.

காது: புறம் பேசக் கேட்பதிலிருந்து பாதுகாத்தல் மற்றும் ஹராமானவற்றைச் செவிமடுக்காது தடுத்தல்.

கண்: ஹராமானவற்றை நோக்காது தவிர்த்துக் கொள்ளலும் பார்க்கும் விடயங்களால் படிப்பினை பெறலும்.

கைகள்: ஹலால் அல்லாத எதையும் தொடாது பாதுகாத்தல்.

கால்: ஹராமான இடங்களுக்குப் பயணம் செய்யாதே. ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தில் அக்கால்களைக் கொண்டு நடக்கும் போது நடுங்கி நரகக் கிடங்கில் விழாமல் பாதுகாத்துக் கொள்ளல்.

வயிறு: பசி நீங்கியதன் பின் சாப்பிடாதே. ஹராமானவற்றைக் கொட்டும் இடமாக ஆக்கிக் கொள்ளாதே.

அவ்ரத்: கெட்ட நடத்தை மற்றும் விபசாரத்தில் இருந்து பாதுகாத்துக் கொள். மனிதர்களின் கண்களில் இருந்து மறைத்துக் கொள்.

தொழுகை: இது இறைவன் முன் ஆஜராவதாகும். வல்லமை மிக்க அல்லாஹ்வின் முன் அடக்கமான> பணிவான அடிமையின் தோற்றத்தில் நின்று கொள். உன் உள்ளத்தால் அவனைக் காண முயற்சி செய். மிகச் சிறந்த முறையில் அதனை நிறைவேற்று.

ஹஜ்: இது அல்லாஹ்வின் வீட்டுக்குச் செல்வதாகும். பாவங்களைக் களைந்து விட்டு அவன் பக்கம் ஓடிச் செல்வதாகும். உன் கடமைகளில் ஒன்று அது. உன் பாவங்கள் மன்னிக்கப் படுவதற்குச் சிறந்த வழி.

நோன்பு: இது உமது நாவு> காது> கண்> வயிறு> அவ்ரத் என்பவற்றின் மீது இறைவன் இட்ட ஒரு திரை. இதன் மூலம் நரக நெருப்பிலிருந்து உன்னைப் பாதுகாத்துக் கொள்ளலாம். நோன்பை விடுவது மேற்கூறிய திரையைக் கிழித்து விடுவதாகும்.

ஸதகா: இறைவன் முன்னிலையில் உன்னிடமுள்ள சேமிப்பு இது தான். இந்த சேமிப்புக்கு அத்தாட்சி தேவையில்லை. இதைச் சரியாகப் புரிந்து கொள்வீராயின் பகிரங்கமாக நன்கொடை செய்வதை விட மறைவாகவே வழங்க முயற்சிப்பீர். இம்மையில் துன்பங்களில் இருந்தும் நோய்களில் இருந்தும் உன்னைக் காப்பாற்றுவது தர்மம். மறுமையில் நரகத்திலிருந்து பாதுகாக்கும்.

ஆசிரியர்: அவருக்கு மரியாதை செய். அவர் முன்னிலையில் ஒழுக்கம் பேணு. அவரது பேச்சை அமைதியாகச் செவிமடு. அவரது குரலை விட உன் குரலை உயர்த்தாதே. அவரிடம் யாரும் கேள்வி கேட்டால் நீ அதற்குப் பதில் சொல்லாதே. அவர் முன்னிலையில் ஏனையோருடன் கதைக்காதே. அவரிடம் மற்றவர் குறைகளைக் கூற முற்படாதே. அவரது குறைகளை யாரும் உன்னிடம் கூற முற்பட்டால் அவரது கௌரவத்தைப் பாதுகாப்பது உனது கடமை என்பதை மறவாதே. அவரிடம் தப்புக் கண்டால் மறைத்து விடு. அவரைப் பற்றி நல்லவற்றைப் பரப்பு. அவரது எதிரிகளுடன் சகவாசம் கொள்ளாதே. அவரது நண்பர்களைப் பகையாதே. இத்தகைய நன்னடத்தை உம்மிடமிருப்pன் நீர் மனிதர்களுக்காகவன்றி அல்லாஹ்வுக்காகவே கல்வி கற்றாய் என்பதற்கு மலக்குகள் சாட்சிகளாக இருப்பார்கள்.

சிஷ்யர்: இறைவன் உமக்கு அறிவு ஞானத்தைத் தந்து அம் மாணவர்களுக்கு அவற்றைப் புகட்டும் பொறுப்பை உமக்கு வழங்கியிருக்கிறான். எனவே நல்ல முறையில் அறிவு புகட்டி அவர்கள் மீது கருணையோடு நடந்துகொண்டால் அல்லாஹ் உன் மீது மேலும் அருள் புரிவான். சரியான முறையில் மக்களுடன் உன் அறிவைப் பகிர்ந்து கொள்ளாவிடின்> மக்கள் மீது இரக்கம் கொண்டு அவர்களை நல்வழிக்கு இட்டுச் செல்லாவிடில் அல்லாஹ் உம் மீது சொறிந்;த பாக்கியங்களைத் திரும்பிப் பெற்றுக் கொள்வான்.

வாழ்க்கைத் துணை: உமது வாழ்க்கைத் துணையை உமக்கு நிம்மதியானதும் ஸ்திரமானதுமான வாழ்வுக்கு வசதியாக ஏற்பாடு செய்து தந்துள்ளான். இது இறைவன் அளித்த பெரும் ஆசீர்வாதம் என்பதை மறவாதே. அவருடன் அல்லது அவளுடன் கண்ணியமாகவும் கனிவோடும் காரியமாற்று.

தாய்: உன்னைக் கற்பத்தில் சுமந்தவர். இரத்தத்தைப் பாலாக ஊட்டியவர். தன் உடலாலும் உள்ளத்தாலும் உன் வளர்ச்சியில் பங்கேற்றவர். தான் பசியில் வாடிய வண்ணம் உன் வயிற்றை நிரப்ப முயற்சித்தவர். தன் தாகத்தைப் பொருட்படுத்தாது உன் தாகத்தைத் தீர்;ததவர். பழையதை அணிந்துகொண்டு உனக்கெனப் புத்தாடை அணிவித்தவர். வெயிலைத் தாம் வாங்கிக் கொண்டு உனக்கு நிழல் தந்தவர். நீ தூங்குவதற்காக விழித்திருந்தவர். சூட்டிலிருந்தும் குளிரிலிருந்தும் காத்து உனக்குப் பணிவிடை புரிந்தவர். நீர் எந்த அளவுக்கு அவருக்குக் கடமைப்பட்டவர் என்பதை நினைத்துப் பார். ஏதோ இறையருளால் வளர்ந்து பெரியவராகி விட்ட பிறகு அவளை மறந்து விடுவதா?

தந்தை: உன் பிறப்புக்குப் பின்னணி. அவரின்றேல் நீர் இல்லை. உமக்குக் கிடைக்கும் சிறப்புகளுக்கு மூலமே அவர் தான். இறைவனுக்கு நன்றி சொல். தந்தைக்கு நன்றி மறவாதே.

பிள்ளை: பிள்ளைகள் உன்னிலிருந்து வந்தவர்கள். அவர்களது நலனும் தீங்கும் உம்மோடு தொடர்புடையவை என்பதை மறந்து விடாதே. இறைவழியில் அவர்களைப் பயிற்றுவிப்பது உனது பொறுப்பு. இறை கட்டளையைப் பேணி நடக்கப் போதிப்பதும் உன் கடமை. அவர்கள் நல்லது செய்கின்ற போது பரிசு கொடுத்து ஊக்குவிக்க வேண்டும். கெட்டது செய்தால் தண்டித்துத் தடுத்துவிட வேண்டும்.

சகோதரன்: சகோதரர்கள் உமது துணையும் கௌரவமும் சக்தியும் ஆவர். இறைவனுக்கு மாறு செய்வதற்கு அவரின் உதவியை நாடாதே. எதிரிக்கு முன்னால் சகோதரனைக் கைவிடாதே. அவருக்கு நன்மையே நாடு. தப்புச் செய்தால் தட்டிக் கொடுக்காதே.

அயல்வீட்டான்: அவன் இல்லாத இடத்தில் அவனது உரிமைகளைப் பேணு. அவன் இருக்கின்ற போது மரியாதையைப் பேணு. அநியாயயம் செய்யப்பட்டவராயின் உதவிக்கரம் நீட்டு> அவர் குறைகளை வெளிப்படுத்தாதே. தேவைப்படும் போது அவருக்கு நற்போதனை செய். கஷ்டத்தின் போது உதவி செய். தவறு செய்தால் மன்னித்து விடு. அவரோடு பெருந் தன்மையோடு நடந்து கொள்.

நண்பர்: நியாயமும் நட்பும் பாராட்டு. உன்னை அவன் மதிப்பது போல் அவனுக்கும் மதிப்புக் கொடு. அவனுக்குத் தொல்லையாக இருக்காமல் அடைக்கலமாக இரு.

பணம்: ஹலால் அல்லாத பணத்தைத் தொடாதே. ஹலால் அல்லாத வழியில் செலவு செய்யாதே. எப்போதும் அல்லாஹ்வைப் பயந்து கொள். உலோபித்தனம் துன்பத்தையே தரும்.

கடன் கேட்பவர்: கடன் கேட்பவருக்கு உம்மிடம் இருந்தால் கொடுத்து விடு. இல்லாவிட்டால் நல்ல வார்த்தைகளால் உபசரிப்புச் செய். மறுத்துப் பேசாமல் மதிப்பளிப்பீர்.

ஆலோசனை கேட்பவர்: அவர் ஆலோசனை பெற விரும்பும் விடயம் பற்றி நன்கு தெரியும் எனின் அவருக்கு வழிகாட்டு. தெரியாது விட்டால் நன்கு தெரிந்த ஒருவரிடத்தில் அனுப்பி வைத்து விடு.

பெரியவர்: உன்னை விட வயதில் மூத்தவர்> பெரியவர்> உன்னை விட அதிக காலம் முஸ்லிமாக இருந்தவர் என்பதற்காக மரியாதை செய். இம்சை கொடுக்காதே. அவருக்கு முன்னால் நடக்காதே. குறுக்கிடாதே.

சிறியவர்: இரக்கம் காட்டு. சொல்லிக் கொடு. மன்னிப்புக் கொடு. தப்பை வெளிப்படுத்தாது மறைத்து விடு. உதவி செய்.

மகிழ்ச்சி தருபவர்: இவருக்காக முதலில் அல்லாஹ்வுக்கு நன்றி கூறு. பிறகு இவருக்கும் நன்றி சொல்.

தொல்லை தருபவர்: மன்னித்து விடு. மன்னிப்பால் அவர் தைரியம் அடையும் போலிருந்தால் அவருக்குப் பொருத்தமான மாற்று நடவடிக்கையைச் செய்து விடு. 'அநியாயம் செய்யப்பட்ட பிறகு அதற்குப் பரிகார நடவடிக்கை மேற்கொள்பவருக்கு அது தப்பல்ல| என்ற அர்த்தம் தொனிக்கும் குர்ஆன் வாக்கியமே இருக்கிறது. (ஷூரா:41)

சமயத்தவர்: அவர்களது நலனுக்காக உளப் பூர்வமாகப் பிரார்த்தனை செய். அவர்களது துர்நடத்தைக்காக வெறுத்துச் செல்லாதே. கருணை காட்டு. நற்காரியத்துக்கு நன்றி பாராட்டு. உன்னால் அவர்களுக்குத் துன்பம் விளையக் கூடாது. நீர் உமக்கு விரும்புபவற்றை அவருக்காகவும் விரும்பு. நீர் வெறுப்பவற்றை அவருக்காகவும் வெறுக்க வேண்டும். பெரியவர்களை உன் பெற்றோர்களைப் போலவும் இளையவர்களை உம் சகோதரர்களாகவும் முதிர்ந்த பெண்களை உம் தாயாகவும் குழந்தைகளை உன் செல்வங்களாகவும் போற்றி மதிப்புக் கொடு.

மறைவு:

தம் வாழ்நாளை சொல்லொணாத் துயரங்களுக்கும் தொல்லைகளுக்கும் மத்தியில் கழித்த அன்னார் ஹி.95 முஹர்ரம்25 அன்று ஷஹீதாக்கப் பட்டார்கள். அப்போது அவருக்கு வயது 57. அப்போதைய உமையா ஆட்சியாளர் வலீதின் கட்டளைப்படி அவரது சகோதரன் ஹிஷாம் தந்திரமாக இமாமுக்கு நஞ்சூட்டினான். (60)

அன்னாரின் புனித ஜனாஸா மதீனாவில் ஜன்னத்துல் பகீயில் இமாம் ஹஸனுடைய அடக்கஸ்தலத்துக்குப் பக்கத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பரஸ்தக்கின் கவிதையில் சில பகுதிகள்:

இவரை யாரென்று கேட்பவனே! இதோ விளக்குகிறேன் கேள். கொடையும் உபசரிப்பும் அடைக்கலம் தேடியது அவரிடத்தில் தான்.

அவரது கால் ஸ்பரிசத்தை இந்த ஹிஜாஸ் பூமியே அறியும். மஸ்ஜிதுல் ஹராமும் ஏனைய இடங்களும் அவரை நன்கு தெரிந்து வைத்துள்ளன.

மனிதர்களில் மிகச் சிரேஷ்டமானவரின் பிள்ளை இவர். தூய்மையும் புனிதமும் மிக்கப் பேரறிஞர்.

இறைவன் எவர் மீது ஸலவாத் சொல்கிறானோ அந்த அஹமது நபி இவரின் தந்தை.

இவர் பெயர் அலீ. அல்லாஹ்வின் தூதரின் பேரப் பிள்ளை. இறைவனின் வழிகாட்டலைச் சுமந்தவர். மக்கள் அவரிடமிருந்து வழிகாட்டலைப் பெறுகின்றனர்.

பெரும் ஷஹீதுகளான ஜஃபர்> ஹம்ஸா போன்றோரின் வாரிசு இவர்.

இவரது தாயார் பெண்களின் தலைவி பாத்திமா. வீரத்துக்கு மறுபெயரான அலீ இவரது தந்தை.

குறைஷிகள் இவரைப் பார்த்தாலோ எல்லா சிறப்புகளும் இவர்களிடத்தில் தான் சென்றடைகின்றன என்பதைப் புரிந்து கொள்வர்.

இது யார் என்று நீர் கேட்பதால் அவருக்குள்ள புகழும் மரியாதையும் குறைந்துவிடப் போவதில்லை. நீ விரும்பா விட்டாலும் அரபுகளுக்கும் அஜம்களுக்கும் அவரை நன்கு தெரியும்.

உமக்குத் தெரியாவிட்டால் இவர் தான் பாத்திமாவின் செல்வம். அவரின் பாட்டனாரில் தான் நபித்துவமே முற்றுப் பெற்றது.

அவர்களை உவப்பது விசுவாசமெனவும் வெறுப்பது இறைமறுப்பு எனவும் அவர்களை அண்டியிருப்பது மீட்சிக்கு வழியெனவும் போற்றப் பட்டவர்கள்.

எல்லாப் பேச்சுக்களின் ஆரம்பத்திலும் முதலிலும் அல்லாஹ்வைப் புகழ்ந்த பின் இவர்கள் மீது ஸலவாத் சொல்லப்படுகிறது.

தக்வா உடையவர்களுக்கு அவர்கள் தான் தலைவர்கள். பூமியில் அதி சிறந்தவர்கள் யார் என்று கேட்டால் இவர்களைத் தான் காட்டுவார்கள்.

அல்லாஹ்வை அறிந்தவர் இவர்களின் சிறப்பைத் தெரிந்து கொண்டனர். இவர்களின் வீட்டில் இருந்து தானே உலகமே தீனைக் கற்றுக் கொண்டது.

அவரது பாட்டனாருடன் பத்ரைக் கண்டவர் அவரது பிதா அலீ. ஷிஃபில் தனித்தவர். உஹதில் போரிட்டவர். கந்தக்கில்>மக்கா வெற்றியில் பளிச்சிட்டவர்.

கய்பரும் ஹுனைனும் குறைழாவும் இவரது பாட்டன் அலீயின் வீரத்துக்குச் சான்றுகள்.

இவரது முகத்தின் ஜோதியால் கருக்கிருட்டும் பகலாகி விடும்.

நாணத்தால் அவர் கண்கள் கீழ் நோக்கியிருக்கும். அவர் மீது கொண்ட பக்தியால் மக்களின் கண்கள் கீழ் நோக்கியிருக்கும். யாரோடு அவர் கதைத்தாலும் அவர் முகத்தில் புன்னகை தவழும்.

பரஸ்தக்கின் நீண்ட கவிதையின் சில அடிகளையே தமிழ் உரை நடையில் தந்தோம். இமாமின் சிறப்புக்கள் பற்றி பரஸ்தக் சொன்னது வெறும் ஓரிரு துளிகளே. அன்னாரின் தக்வாவும் பணிவும் மனிதாபிமானமும் இறைவணக்கமும் வழிகாட்டலும் அன்பும் இரக்கமும் உண்மையும் வீரமும் பட்ட துன்பங்களும் பொறுமையும் என எவ்வளவென்று விபரிப்பது.

அல்லாஹ் நமக்கு வழிகாட்டுவானாக.

அடிக்குறிப்புகள்

(1)ஷெய்க் முபீத்> மஸாருஷ் ஷீயா> ப.34 (ஹி.1315)

(2)உஸூலுல் காபீ> பா.1> ப.467. (ஆகூன்தி பதிப்பு)

(3)ஆல இம்ரான்:134

(4)ஷெய்க் முபீத்> இர்ஷாத்> ப.240 (ஆகூன்தி பதிப்பு)

(5)ஷெய்க் ஸதூக்> ஆமாலீ> ப.133 (பழைய பதிப்பு)

(6)இர்ஷாத்> ப.242

(7)இப்னுல் ஜவ்ஸீ> தஸ்கிரத்துல் கவாஸ்> ப.184

(8)இர்ஷாத்> ப.238

(9)ஷெய்க் ஸதூக்> ஹிஸால்> ப.517

(10)பெரும் பிரமுகர்கள் தம்மைப் பாடும் கவிஞர்களுக்கு இவ்வாறு பரிசு வழங்குவது மரபு.

(11)ஸெய்யத் முhதழாவின் ஆமாலீயில் இருந்து தொகுக்கப்பட்டது. பா.1> ப.69.

(12)தப்ரீஸீ> இஹ்திஜாஜ்> ப.166> நஜப் ஹி.1350.

(13)ஸூரா அல் ஸுமர்:42

(14)இப்னு தாவூஸ்> லுஹூஃப்> ப.144> ஹி.1317

(15)தஸ்கிரத்துல் கவாஸ்> ப.149.

(16)ஸூரா அல் சூரா:23

(17)ஸூரா அல் இஸ்ரா:26

(18)ஸூரா அல் அன்பால்: 40

(19)ஸூரா அல் அஹ்ஸாப்: 33

(20)தபரீஸீ> இஹ்திஜாஜ்> ப.167> நஜப் ஹி.1350.

(21)பஹாயீ> காமில> பா.2> ப.300

(22)முஹத்திஸ் கும்மீ> நப்ஸுல் மஹ்மூம்> ப.284

(23)யானை வருடம் 25இல் நபிகளாரின் கைகளால் ஹஜருல் அஸ்வத் பொருத்தப்பட்ட வரலாறு கற்றிய சாடை.

(24)இது மிஃறாஜைக் குறிக்கிறது.

(25)காமில்> பா.2> ப.300

(26)மே.கு. பா.2> ப.300-302 சுருக்கம்.

(27)இர்ஷாத்> ப.226

(28)தஸ்கிரத்துல் கவாஸ்> ப.183.

(29)தபக்காத்> பா.5> ப.157 -லெய்டன் பதிப்பு.

(30)லுஹூப்> ப.128> ஹி.1317

(31)அல் காபீ> பா.7. ப.56

(32)இப்னு அஸீர்> காமில்> பா.4> ப.103.

(33)இப்னு கதீர்> அல்பிதாயத்து அன்னிஹாயா> பா.8> ப.221

(34)இப்னு அஸீர்> காமில்> பா.4> ப.130

(35)ஸுயூத்தீ, தாரீகுல் குலபா> ப.212> ஹி.1383

(36)இப்னு அஸீர்> காமில், பா.4. ப.348 முதல்.

(37)மே.கு. ப.521-522

(38)மே.கு. ப.587

(39)அல் காபீ> பா.5> ப.344

(40)தஸ்கிரத்துல் கவாஸ்> ப.183

(41)தாரீகுல் குலபா> ப.223

(42)தபரீ. தரீக்> பா.8> ப.1178> லண்டன்.

(43)இப்னு ஷஹ்ர் ஆசூப்> மனாகிப்> பா.3> ப.311> நஜப்.

(44)அல் இஹ்திஜாஜ்> ப.171> நஜப் ஹி.1350

(45)இப்னு அபில் ஹதீத்> ஷரஹ் நஹ்ஜுல் பலாஹா> பா.4> ப.104 (20 பாகமுள்ள பதிப்பு)

(46)ஷெய்க் தூஸீ> றிஜால்> ப.81 முதல்.

(47)கஷ்ஷீ> றிஜால்> ப.119, மஷஹத் பல்கலைக் கழகம்.

(48)மே.கு. ப.485

(49)மனாகிப்> பா.3> ப.311

(50)ஸாஈத் என்றால் அதிர்ஷ்டசாலி> ஜபீர் என்றால் இணைப்பவர் என்று பொருள். இழிவு படுத்துவதற்காக ஷகீ -துரதிர்;ஷ்டம் பிடித்தவர்> கஸீர் -உடைப்பவர் என ஹஜ்ஜாஜ் ஸயீதை அழைத்தார்.

(51)கஷ்ஷீ> ப.119

(52)ஸூறா அல் அன்ஆம்: 79

(53)ஸூறா அல் பகறா:115

(54)ஸூறா தாஹா: 55

(55)றவ்ழாத்துல் ஜன்னாத்> பழைய இரண்டாம் பதிப்பு> ப.310> சுருக்கம்.

(56)கஷ்ஷீ> ப.119

(57)ஆகூன்தியன் பதிப்பில் வெளிவந்த பாரசீக மொழிபெயர்ப்பின் இறுதியில் பார்க்கவும்.

(58)அல் தரீயா> பா.13> ப.345 முதல்.

(59)இப்னு ஷு∴பா (ஹி.4ம் நூற்றாண்டு ஷீயா அறிஞர்)> துஹபுல் உகூல்> ப.255> மன் லா யஹ்ழுருஹுல் பகீஹ்> பா.2>ப.618> ஹிஸால்> ப.564> ஆமாலீ ப.221.

(60)மனாகிப்> பா.3> ப.311